எம்.சி.ஓ.பி. எண்: 2954/2020 தேதி : 12.6.2024

ம.சா. : 1

பெயர் : திருமதி. கோமதி

க/பெ. : திரு. சண்முகபாண்டி

வயது : 47

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேலும், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 11 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன். மசாஆ 10–ஆன ஆவணம் 2ம் எதிர்மனுதாரரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய முதல் திருமண் ஜீலை 2014–லேயே விவகாரத்து ஆகி விட்டது என்றால் சரிதான். நான் இறந்து போன திரு.சண்முக பாண்டியை எப்போது எங்கு வைத்து திருமணம் செய்து என்று பிரமாண வாக்குமூலத்தில் கூறிவில்லை என்றால் சரிதான். இறந்தவரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருடைய வாரிசு சான்றிதழில் அவருடைய தாய், தந்தையரின் பெயர் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். நான் திரு.சண்முக பாண்டியை திருமணமே செய்யவில்லை என்றாலும், அவருடைய மனைவியை இல்லையே என்றாலும் சரியல்ல. மனைவியே இல்லாத காரணத்தால் நான் எந்த இழப்பீடும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் உயர் நீதிமன்றத்தில் வாரிசு சான்று கோரி ரிட் மனு தாக்கல் செய்தேன், அந்த மனு தள்ளுபடி ஆகி விட்டது என்றால் கீழமை நீதிமன்றத்தில் பார்த்து கொள்ங்கள் என்று கூறிவிட்டார்கள். இறந்தவரின் பெற்றோர் நான் இறந்தவரின் மனைவி இல்லை எனறும் அவர் திருமணமாகதவர் என்றும் கூறியுள்ளார்கள் என்றால் சரி, அதை மறுத்து நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். ஆனால், நான் மனைவி என்பதற்கு ஆதாரமாக மசாஆ 2, 6 மற்றும் 7 ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அட்டை தாக்கல் செய்துள்ளேன். இறந்தவர் எங்கு வேலைப்பார்த்தார் என்ற விவரத்தை மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறிவில்லை என்றால் சரிதான். அவர் ஆங்கிலோ இந்தியன் ஃபீஸ்ட் என்ற நிறுவனத்தில் வேலைப்பார்த்தார். இறந்தவர் வேலைப்பார்த்த நிறுவனத்திலிருந்து இறந்ததற்கான தொகை எனக்கு எதுவும் கொடுக்க வில்லை என்றால் தெரியாது. அதனால், முயற்சி எடுக்கவில்லை. நான் வாரிசே இல்லாத காரணத்தால் இந்த மனு என்னை பொறுத்து தள்ளபடி ஆக வேண்டும்

என்றல் சரியல்ல. தொழில், வருமானம் காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.